CNR NO: TNTH13-008794-2023

நீதித்துறை நடுவர் நீதிமன்றம், போடிநாயக்கனூர்.

**முன்னிலை : திரு.M.நல்லகண்ணன், B.Com., B.L.,**
நீதித்துறை நடுவர், போடிநாயக்கனூர்.

2026-ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 30-ஆம் நாள் வியாழக்கிழமை

சுருக்குமுறை விசாரணை வழக்கு எண்: 1085/2023

பிரபாகரன் ..... புகார்தாரர்

/ எதிர் /

கார்த்திகேயன்தாஸ் ..... எதிரி

**<u>வழக்கின் சுருக்கம்</u>**

<table>
<tr><th>வ. எண்</th><th colspan="2">விவரம்</th></tr>
<tr><td rowspan="2">1.</td><td colspan="2">இருதரப்பினர்களின் பெயர்கள்</td></tr>
<tr><td><u>புகார்தாரர்</u>:<br><br>பிரபாகரன் (31/2026),<br>த/பெ.ரகு,<br>கதவு எண்.56A,<br>அரண்மனைத் தெரு, கோம்பை,<br>உத்தமபாளையம் வட்டம்,<br>தேனி மாவட்டம்.</td><td><u>எதிரி</u>:<br><br>கார்த்திகேயன்தாஸ் (33/2026),<br>த/பெ.தேவதாஸ்,<br>கதவு எண்.2-149, அரசினம்பட்டி,<br>சிங்கம்புணரி,<br>சிவகங்கை மாவட்டம்.</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| 2. | எதிரியின் வயது | 33/2026. |
| 3. | தந்தை/கணவர் பெயர் | த/பெ.தேவதாஸ். |
| 4. | மதம் | இந்து. |
| 5. | தொழில் | –. |
| 6. | முகவரி | கதவு எண்.2-149, அரசினம்பட்டி, சிங்கம்புணரி. |
| 7. | தாலுகா, மாவட்டம் | சிங்கம்புணரி, சிவகங்கை. |
| 8. | சம்பவம் நிகழ்ந்த நாள் | பொருந்தாது. |
| 9. | கைது | –– |
| 10. | பிணையில் விடுவித்தல் | –– |
| 11. | எதிரி சிறையில் இருந்த நாட்கள் | –– |
| 12. | புகார் தாக்கல் செய்யப்பட்ட நாள் | 15.09.2023. |
| 13. | கோப்பிற்கு எடுக்கப்பட்ட தேதி | 15.09.2023. |
| 14. | அழைப்பாணையுடன் நகல் வழங்கப்பட்ட தேதி | 04.12.2023. |
| 15. | கு.வி.மு.ச பிரிவு 251-ன் கீழ் கேள்வி கேட்கப்பட்ட நாள் | 08.01.2024. |
| 16. | விசாரணை துவக்கம் | 05.02.2024. |
| 17. | சாட்சிகள் விசாரிக்கப்பட்ட நாள் | Witness / Chief / Cross<br>PW1 / 07.02.2024 / 08.04.2025<br>PW2 / 25.07.2024 / 25.07.2024<br>DW1 / 25.09.2025 / 25.09.2025<br>DW2 / 08.05.2026 / 08.05.2026 |
| 18. | விசாரணை முடிவு | 15.07.2026. |

<table>
<tr><td>19.</td><td>கு.வி.மு.ச பிரிவு 313(1)(b)-ன் கீழ் கேள்வி கேட்கப்பட்ட நாள்</td><td colspan="4">20.08.2024.</td></tr>
<tr><td rowspan="8">20.</td><td rowspan="8">பிற மனுக்கள் மற்றும் அதன் முடிவுகள்</td><td>Date</td><td>U/s</td><td>Cr.M.P. No.</td><td>Result</td></tr>
<tr><td>04.04.2024</td><td>309 of Cr.P.C</td><td>3190/2024</td><td>Allowed</td></tr>
<tr><td>03.09.2024</td><td>311 of Cr.P.C</td><td>4654/2024</td><td>Allowed</td></tr>
<tr><td>05.06.2025</td><td>315 of Cr.P.C</td><td>1102/2025</td><td>Dismissed as withdraw</td></tr>
<tr><td>04.07.2025</td><td>315 of Cr.P.C</td><td>1169/2025</td><td>Allowed</td></tr>
<tr><td>01.11.2025</td><td>233 of Cr.P.C (145(2) NI Act)</td><td>2316/2025</td><td>Allowed</td></tr>
<tr><td>27.03.2026</td><td>91 of Cr.P.C</td><td>1036/2026</td><td>Allowed</td></tr>
<tr><td>15.07.2026</td><td>233 of Cr.P.C</td><td>1622/2026</td><td>Dismissed</td></tr>
<tr><td>21.</td><td>தீர்ப்பு விவரம்</td><td colspan="4">விடுதலை.</td></tr>
<tr><td>22.</td><td>தீர்ப்புரை நகலை வழங்குதல்</td><td colspan="4">இல்லை.</td></tr>
<tr><td>23.</td><td>தலைமறைவாக இருந்த எதிரியின் விவரங்கள்</td><td colspan="4">இல்லை.</td></tr>
<tr><td>24.</td><td>மேல் நீதிமன்றத்தின் தடை மற்றும் அதன் முடிவு</td><td colspan="4">இல்லை.</td></tr>
<tr><td>25.</td><td>பாதிக்கப்பட்ட நபருக்கு இழப்பீட்டிற்கான உத்தரவு</td><td colspan="4">இல்லை.</td></tr>
<tr><td>26.</td><td>காலதாமதத்திற்கான காரணம்</td><td colspan="4">புகார்தாரர் தரப்பு சாட்சியை எதிரி தரப்பில் காலதாமதமாக குறுக்கு விசாரணை செய்ததும் மற்றும் காலதாமதமாக எதிரி தரப்பு சாட்சி விசாரணை செய்யப்பட்டதும்.</td></tr>
</table>

*****

இவ்வழக்கு 15.09.2023 அன்று இந்நீதிமன்றத்தில் கோப்பிற்கு எடுக்கப்பட்டு, இறுதியாக 17.07.2026 அன்று விசாரணைக்கு வந்தபோது, புகார்தாரர் தரப்பில் வழக்குரைஞர் திரு.R.நாகராஜன் அவர்கள் முன்னிலையாகியும், எதிரி தரப்பில் வழக்குரைஞர் திரு.P.கணேசன் அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பிலும் எடுத்துரைத்த வாதுரைகளைக் கேட்டு, வழக்காவணங்களைப் பரிசீலனை செய்து, இதுநாள்வரை இந்நீதிமன்ற விசாரணையில் இருந்து வந்த இவ்வழக்கில் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்.....

## <u>தீர்ப்புரை</u>

1). இவ்வழக்கானது புகார்தாரர் சார்பில் மாற்றுமுறை ஆவணச்சட்டம் பிரிவு 138 மற்றும் 142–ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டு, கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது.

2). **<u>மனுவின் சுருக்கம்</u>**:

2.1). இவ்வழக்கின் எதிரி, புகார்தாரரிடம் கடந்த 06.03.2023 அன்று ரூ.10,00,000/-த்தை கடனாகப் பெற்றுக்கொண்டு, அதற்கு ஆதரவாக மதுரை கோரிப்பாளையம் கிளை, YESBANK-ன் 841591 என்ற எண் கொண்ட காசோலையை ரூ.5,00,000/-த்திற்கும் மற்றும் 841592 என்ற எண் கொண்ட காசோலையை ரூ.5,00,000/-த்திற்கும் 05.05.2023 என்று பின்தேதியிட்டுக் கொடுத்ததாகவும், மேற்படி காசோலைகளைப் பணமாக்கும் பொருட்டு புகார்தாரர் தான் கணக்கு வைத்திருக்கும் ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா வங்கி, தேவாரம் கிளையில் வசூலுக்கு செலுத்தியபோது, எதிரியின் வங்கி கணக்கில் "Payment Stopped by Drawer" என்ற காரணத்தினால் காசோலைகளானது 28.07.2023 அன்று திருப்பப்பட்டுவிட்டதாகவும், மேற்படி காசோலைகளுக்குரிய தொகையைக் கேட்டு 10.08.2023 அன்று புகார்தாரர் எதிரிக்கு அனுப்பிய சட்டஅறிவிப்பை எதிரி

11.08.2023 அன்று பெற்றுக்கொண்டு, இதுவரை பதில் அறிவிப்பு எதுவும் அனுப்பாமலும், மேலும், இதுவரை எதிரி காசோலைகளுக்குரிய தொகையைத் திருப்பிச் செலுத்தாமல், புகார்தாரரை ஏமாற்றி மோசடி செய்துள்ளதாகவும்,

2.2). எனவே, எதிரியின் செய்கையானது மாற்றுமுறை ஆவணச்சட்டம் பிரிவு 138-ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றமாகும் என்றும், எனவே, புகார்தாரருக்கு ஏற்பட்ட இழப்புக்கு எதிரிக்கு தண்டனை வழங்கி, உரிய இழப்பீட்டை எதிரியிடமிருந்து பெற்றுத்தர வேண்டி புகார்தாரர் மனுத் தாக்கல் செய்துள்ளார்.

3). எதிரிக்கு அழைப்பாணையுடன் நகல்கள் இலவசமாக வழங்கப்பட்டு, அழைப்பாணை சார்வு செய்யப்பட்டு, எதிரி இந்நீதிமன்றத்தில் ஆஜரானபோது, எதிரி மீது மாற்றுமுறை ஆவணச்சட்டம் பிரிவு 138-ன் கீழான குற்றத்தின் சாரம்சம் குறித்து 08.01.2024-ஆம் தேதி விளக்கி கூறி வினவியபோது, எதிரி பொய் வழக்கு என்று கூறியுள்ளார். எனவே, புகார்தாரர் தரப்பு சாட்சிய விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

4). <u>**புகார்தாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்**</u>:–

புகார்தாரர் தரப்பு சாட்சிகளை விசாரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு, புகார்தாரர் பிரபாகரன் என்பவர் ம.சா.1 சாட்சியாக விசாரிக்கப்பட்டு, ம.சா.1–ன் மூலமாக ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.6 வரையான சான்றாவணங்கள் குறியிடப்பட்டுள்ளன. மேலும், புகார்தாரர் தரப்பில் மதுரை Yes Bank வங்கி கிளை மேலாளர் பாலமுருகன் என்பவர் ம.சா.2 சாட்சியாக விசாரிக்கப்பட்டு, ம.சா.2–ன் மூலமாக சான்றாவணங்கள் எதுவும் குறியிடப்படவில்லை.

5). புகார்தாரர் தரப்பு சாட்சியத்தில் எதிரிக்குப் பாதகமாக உள்ள அம்சங்களைத் தொகுத்து 20.08.2024-ஆம் தேதி கு.வி.மு.ச பிரிவு 313(1)(b)-ன் கீழ் வினவியபோது, வழக்கு காசோலைகள் மற்றும் காசோலைகளில் உள்ள கையெழுத்துக்கள் தன்னுடையதுதான் என்றும், தனது தரப்பில் விசாரிக்க சாட்சி உண்டு என்றும் கூறினார். எனவே, எதிரி தரப்பு சாட்சிய விசாரணைக்கு வாய்ப்பு வழங்கப்பட்டு, எதிரி தரப்பு சாட்சிய விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

6). **எதிரி தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்**:–

எதிரி தரப்பில் எதிரி கார்த்திகேயன்தாஸ் என்பவர் எ.சா.1 சாட்சியாக விசாரிக்கப்பட்டு, எ.சா.1–ன் மூலமாக எ.சா.ஆ.1 சான்றாவணம் குறியிடப்பட்டுள்ளது. மேலும், எதிரி தரப்பில் சிங்கம்புணரி ICICI வங்கி கிளை மேலாளர் ராஜ்குமார் என்பவர் எ.சா.2 சாட்சியாக விசாரிக்கப்பட்டு, எ.சா.2–ன் மூலமாக சான்றாவணங்கள் எதுவும் குறியிடப்படவில்லை. மேலும், எதிரி தரப்பில் நமது மாண்பமை உச்ச நீதிமன்றம் வழங்கிய **Dashrathbhai Trikambhai Patel Vs Hitesh Mahendrabhai Patel (SC) (Dr. D.Y. Chandrachud, J.) 2022 (6) CTC 467** மற்றும் **Kaveri Plastics Vs Mahdoom Bawa Bahrudeen Noorul** என்ற முன்தீர்ப்பு நெறிமுறைகளையும், நமது மாண்பமை சென்னை உயர் நீதிமன்றம் வழங்கிய **E. Bhaskar V. M. Aravind Bagrecha (Mad.) (T.V. Thamilselvi, J.) 2026 (1) MWN (Cr.) DCC 93 (Mad.)** என்ற முன்தீர்ப்பு நெறிமுறையையும் மேற்கோள் காட்டி மேற்படி முன்தீர்ப்பு நகல்களை தாக்கல் செய்துள்ளார்.

7). இருதரப்பும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது.

8). **தீர்வுக்குரிய பிரச்சனை**:

8.1). இவ்வழக்கில் எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள மாற்றுமுறை ஆவணங்கள் சட்டம் பிரிவு 138-ன் கீழான குற்றச்சாட்டானது புகார்தாரர் தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளதா?

8.2). மனுவில் கோரியுள்ள இழப்பீட்டுத் தொகை புகார்தாரருக்கு கிடைக்கத்தக்கதா? என்பதே தீர்வுக்குரிய பிரச்சனையாகும்.

9). **தீர்வும் அதன் காரணமும்**

9.1). வழக்கு காசோலைகள் எதிரியின் வங்கிக் கணக்கிற்குரிய காசோலைகள்தான் என்பது எதிரி தரப்பில் மறுக்கப்படவில்லை. மேலும், ம.சா.ஆ.1 மற்றும் ம.சா.ஆ.2 வழக்கு காசோலைகளானது 05.05.2023-ஆம் தேதியிடப்பட்டுள்ள நிலையில், மேற்படி காசோலைகளை புகார்தாரர் தான் கணக்கு வைத்துள்ள தேவாரம் கிளை, State Bank of India வங்கியில் வசூலுக்குச் செலுத்தியுள்ளார் என்பதும், மேற்படி காசேலைகளானது 28.07.2023-ஆம் தேதியில் PAYMENT STOPPED BY DRAWER என்ற குறிப்புடன் திரும்பியுள்ளது என்பதை ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.3 வரையான ஆவணங்களின் மூலம் அறிய முடிகிறது.

9.2). காசோலைகள் திருப்பப்பட்டவுடன் எதிரிக்கு வழக்கறிஞரின் அறிவிப்பு சட்ட முறையான காலத்தில் சார்பு செய்யப்பட்டுள்ளதா? என்பது குறித்துப் பரிசீலனை செய்கையில், ம.சா.ஆ.4 வழக்கறிஞர் அறிவிப்பானது 10.08.2023-ஆம் தேதி புகார்தாரரால் அனுப்பப்பட்டுள்ளது என்பதும், அதனை எதிரி 11.08.2023-ஆம் தேதி பெற்றுக் கொண்டுள்ளார் என்பதையும் ம.சா.ஆ.4 மற்றும் ம.சா.ஆ.5 வரையான ஆவணங்கள்

வாயிலாக அறிய முடிகிறது. எனவே, புகார்தாரர் சட்டமுறையான காலத்தில் சட்ட அறிவிப்பு அனுப்பியுள்ளார் என்பதும், அதனை எதிரி பெற்றுக்கொண்டுள்ளார் என்பதும் மேற்படி சான்றாவணங்களின் வாயிலாக புகார்தாரர் தரப்பு நிரூபித்துள்ளது என்று இந்த நீதிமன்றம் கருதுகிறது.

9.3). மேலும், வழக்கு ஆவணங்களைப் பரிசீலனை செய்கையில், வழக்கானது 15.09.2023-ஆம் தேதி தாக்கல் செய்யப்பட்டு, இந்நீதிமன்றத்தால் 15.09.2023-ஆம் தேதி முறையாக கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது. எனவே, வழக்கானது உரிய காலத்திற்குள் புகார்தாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக இந்த நீதிமன்றம் கருதுகிறது. வழக்கு காசோலைகளானது எதிரி, புகார்தாரருக்கு கொடுக்க வேண்டிய சட்டப்படியான கடனிலிருந்து விடுபடக் கொடுக்கப்பட்டதா? என்பது குறித்து பரிசீலனை செய்கையில், எதிரி காசோலைகளையும், அதிலுள்ள கையொப்பத்தையும் மறுக்கவில்லை. மேலும், கு.வி.மு.ச பிரிவு 251-ன் கீழ் வினவியபோது, பொய் வழக்கு என்று மட்டுமே கூறியுள்ளார். மேலும், எதிரியை கு.வி.மு.ச பிரிவு 313(1)(b)-ன் கீழ் வினவியபோது, எதிரி வழக்கு காசோலைகள் மற்றும் காசோலைகளில் உள்ள கையெழுத்துக்கள் தன்னுடையதுதான் என்றும், தனது தரப்பில் விசாரிக்க சாட்சி உண்டு என்றும் குறிப்பிட்டுள்ளாரே தவிர, வழக்கு காசோலைகளில் உள்ள கையொப்பம் தன்னுடையதல்ல என எதிரி மறுக்கவில்லை. எனவே, மாற்றுமுறை ஆவணச் சட்டப்பிரிவு 118 மற்றும் 139-ன் கீழான சட்டப்படியான அனுமானம் புகார்தாரருக்கு ஆதரவாக எழுகிறது என்று இந்த நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

9.4). மேற்படி சட்டப்பூர்வமான அனுமானத்தை மறுத்துரைக்கும் வகையில், எதிரி தனது தரப்பு வழக்கை நிரூபணம் செய்ய நேரடியாக சாட்சிகளை முன்னிலைப்படுத்த வேண்டியதில்லை. மாறாக வழக்கை இதர சாட்சிய, சான்றாவணங்கள் வாயிலாகவோ, அல்லது சூழ்நிலை, சந்தர்ப்பத்தின் வாயிலாகவோ மறுத்துரைக்கலாம் என்று மாண்பமை உச்ச நீதிமன்றம் பல்வேறு முன் வழக்குகளில் வழிவகை செய்துள்ளது.

எதிரி தரப்பில் புகார்தாரருக்கு ஆதரவான அனுமானம் மறுக்கப்பட்டுள்ளதா? என்பது குறித்துப் பரிசீலனை செய்கையில்,

9.5). ம.சா.1 பிரபாகரன் தனது குறுக்கு விசாரணையில், "**27.07.2018-ஆம் தேதிக்கு முன்பு எதிரியிடம் இருந்து நான் பணம் பெற்றேனா? என்றால், ரூ.6,00,000/-த்தை வேறு ஒரு காசோலைக்காக வட்டியுடன் சேர்த்து எதிரியிடம் பெற்றேன்**" என சாட்சியம் அளித்துள்ளார். அதாவது, இந்த வழக்கு காசோலைகளானது வசூலுக்கு தாக்கல் செய்யப்படுவதற்கு முன்பாக ரூ.6,00,000/-ம் தொகை எதிரி கொடுத்ததாகவும், அதனை தான் பெற்றுக் கொண்டதாகவும், அந்தத் தொகை இந்த வழக்கு காசோலைகளுக்குரிய தொகை இல்லை எனவும் ம.சா.1 பிரபாகரன் தனது குறுக்கு விசாரணையில் சாட்சியம் அளித்துள்ளார்.

9.6). மேலும், இது குறித்து புகார்தாரர் தரப்பில் எதிரியை குறுக்கு விசாரணை செய்கையில், எதிரி கார்த்திகேயன்தாஸ் தனது குறுக்கு விசாரணையில், "**எங்கள் நட்பின் அடிப்படையில் நான் பலமுறை அவரிடம் கடன் வாங்கி, கொடுத்து வந்திருக்கிறேன் என்றால், சரிதான்**" என சாட்சியம் அளித்துள்ளார்.

9.7). அதாவது, எதிரி பலமுறை இந்த வழக்கின் புகார்தாரிடம் இருந்து பல நேரங்களில் கடன் பெற்றுள்ளார் என்றும், அந்த கடனை திருப்பிச் செலுத்தியுள்ளார் என்றும், அவ்வாறு ஏற்கனவே பெற்ற கடனுக்காகத்தான் இந்த ரூ.6,00,000/-ம் தொகை திருப்பிக் கொடுக்கப்பட்டதாகவும் புகார்தாரர் தரப்பில் குறிப்பிடப்படும் வாதம் குறித்து பரிசீலனை செய்கையில்,

9.8). எதிரி கார்த்திகேயன்தாஸ் தனது குறுக்கு விசாரணையில், "**06.03.2023-ஆம் தேதி நான் பிரபாகரனிடம் ரூ.10,00,000/-ம் பணம் வாங்கினேனா? என்றால், பிப்ரவரி மற்றும் மார்ச் மாதத்தில் கொஞ்சம் கொஞ்சமாக கொடுத்தார், மொத்தமாக**

**வாங்கவில்லை**" என சாட்சியம் அளித்துள்ளார். அதாவது, ஒரே நாளில் மொத்தமாக ரூ.10,00,000/-ம் பணத்தைப் பெறவில்லை எனவும், 2023-ஆம் வருடம் பிப்ரவரி மற்றும் மார்ச் மாதத்தில் கொஞ்சம் கொஞ்சமாக பெற்றுக் கொண்டதாக குறிப்பிட்டு சாட்சியம் அளித்துள்ளார்.

9.9). எனவே, எதிரி ரூ.10,00,000/-ம் பணம் கடன் பெற்றார் என்ற விபரத்தை எதிரி கார்த்திகேயன்தாஸ் என்பவரது குறுக்கு விசாரணையின் வாயிலாகவே அறிய முடிகிறது. இருப்பினும், எதிரி கார்த்திகேயன்தாஸ் திருப்பி கொடுத்ததாகச் சொல்லும் பணம் குறித்து பரிசீலனை செய்கையில்,

9.10). எ.சா.2 ஐ.சி.ஐ.சி.ஐ வங்கி கிளை மேலாளர் ராஜ்குமார் என்பவரது முதல் விசாரணையில், "**கார்த்திகேயன்தாஸ் வங்கிக் கணக்கில் இருந்து 18.05.2023-ஆம் தேதி ரூ.50,000/-ம் சென்றுள்ளது என்றால், சரிதான். 20.05.2023-ஆம் தேதி கார்த்திகேயன்தாஸ் வங்கி கணக்கில் இருந்து ரூ.4,00,000/-ம் சென்றுள்ளது என்றால், சரிதான். 22.05.2019-ஆம் தேதி கார்த்திகேயன்தாஸ் வங்கி கணக்கிலிருந்து ரூ.50,000/-ம் சென்றுள்ளது என்றால், சரிதான். அதே தேதியில் கார்த்திகேயன்தாஸ் வங்கி கணக்கிலிருந்து ரூ.99,999/- சென்றுள்ளது என்றால், சரிதான்**" என சாட்சி அளித்துள்ளார். அதாவது, மொத்தம் ரூ.5,99,999/- ரூபாய் பணம் கார்த்திகேயன்தாஸ் என்பவரது கணக்கிலிருந்து சென்றுள்ளது என்ற விபரம் எ.சா.2 ராஜ்குமார் என்பவரது முதல் விசாரணையில் இருந்து அறிய முடிகிறது.

9.11). மேலும், இது குறித்து புகார்தாரர் தரப்பில் மேற்படி எ.சா.2 ராஜ்குமார் என்பவரது குறுக்கு விசாரணையில், "**கார்த்திகேயன்தாஸ் என்பவரது வங்கி கணக்கில் இருந்து முதல் விசாரணையில் சொல்லியுள்ள தொகைகள் யாருடைய வங்கி கணக்கிற்கு சென்றது என்ற விபரம் இல்லை என்றால், சரிதான்**" என சாட்சியம் அளித்துள்ளார். அதாவது, எ.சா.2 ராஜ்குமார் என்பவரது முதல் விசாரணையில்

சொல்லியுள்ள, எதிரி கார்த்திகேயன்தாஸ் என்பவரது வங்கி கணக்கில் இருந்து சென்றதாகச் சொல்லும் ரூ.5,99,999/- பணம் யாருடைய வங்கிக் கணக்கிற்கு சென்றது என்ற விவரம் நிரூபிக்கப்படவில்லை என்பதாக எ.சா.2 ராஜ்குமார் என்பவரை புகார்தாரர் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளது.

9.12). மேலும், இது குறித்து பரிசீலனை செய்கையில், ம.சா.1 பிரபாகரன் தனது குறுக்கு விசாரணையில், **"18.05.2023-ஆம் தேதி ரூ.50,000/-மும், 20.05.2023-ஆம் தேதி ரூ.4,00,000/-மும், 21.05.2023-ஆம் தேதி ரூ.50,000/-மும், 22.05.2019-ஆம் தேதி ரூ.99,999/-ம் எதிரியின் வங்கி கணக்கில் இருந்து எனது வங்கிக் கணக்கிற்கு அனுப்பினார் என்றால், சரிதான்"** என சாட்சியம் அளித்துள்ளார்.

9.13). எனவே, எ.சா.2 ராஜ்குமார் என்பவரது குறுக்கு விசாரணையில், இந்த வழக்கு எதிரியின் வங்கி கணக்கில் இருந்து யாருடைய வங்கி கணக்கிற்கு ரூ.5,99,999/-ம் பணம் சென்றது என்ற விவரம் நிரூபிக்கப்படவில்லை என்றாலும்கூட, ம.சா.1 பிரபாகரன் என்பவர் தனது குறுக்கு விசாரணையில், மேற்படி தொகை எதிரியின் வங்கி கணக்கில் இருந்து தன்னுடைய வங்கி கணக்கிற்கு அனுப்பப்பட்டது என்ற விபரத்தை ஒப்புக்கொண்டு சாட்சியம் அளித்துள்ள நிலையில், அது குறித்து எ.சா.2 ராஜ்குமார் குறிப்பிட்டு கூறவில்லை என்பதாலேயே, மேற்படி விபரம் மறுக்கப்பட்டதாக கருத இயலாது. ஏனெனில், ஒத்தேற்றுக்கொண்ட விபரம் (admitted facts) இந்திய சாட்சிய சட்டம் 1872 பிரிவு 58-ன் கீழ் மீண்டும் நிரூபிக்கப்பட வேண்டியது இல்லை என்று இந்த நீதிமன்றம் கருதுகிறது.

9.14). எனவே, எ.சா.2 ராஜ்குமார் என்பவரின் குறுக்கு விசாரணையில், மேற்படி தொகை யாருடைய வங்கிக் கணக்கிற்கு சென்றது என்ற விவரம் நிரூபிக்கப்படவில்லை என்றாலும்கூட, ம.சா.1 பிரபாகரன் தனது குறுக்கு விசாரணையில், தனது வங்கி கணக்கிற்குதான் மேற்படி பணம் வந்தது என

ஒப்புக்கொண்டுள்ள நிலையில், மேற்படி பணம் யாருக்கு சென்றது என்ற விபரம் எதிரி தரப்பால் நிரூபிக்கப்படவில்லை எனக் குறிப்பிடும் புகார்தாரர் தரப்பு வாதம் ஏற்புடையது அல்ல என்று இந்த நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

9.15). மேலும், புகார்தாரர் தனது நிரூபண வாக்குமூலத்தில், "**எதிரி தலா ரூ.5,00,000/-ம் ரூபாய்க்கு இரண்டு காசோலைகளில் 05.05.2023-ஆம் தேதியிட்டு கொடுத்ததாகவும், 05.05.2023-ஆம் தேதி மேற்படி காசோலைகளை வசூலுக்காக சமர்ப்பிக்க இருந்த சமயத்தில், எதிரி தன்னை தற்சமயம் காசோலைகளை வசூலுக்கு போட வேண்டாம் என்றும், இரண்டு மாத காலத்திற்குப் பின்பு வசூலுக்கு போட்டு பணத்தைப் பெற்றுக் கொள்ளும்படி உறுதிபட கூறினார்**" எனவும் குறிப்பிட்டுள்ளார்.

9.16). அதாவது, புகார்தாரர் 06.03.2023-ஆம் தேதி ரூ.10,00,000/-ம் கடன் கொடுத்ததாகவும், அன்றையதினமே எதிரி இந்த வழக்கின் இரண்டு காசோலைகளையும் தலா ரூ.5,00,000/-ம் ரூபாய்க்கு 05.05.2023 என பின்தேதியிட்டு காசோலைகளை எழுதிக் கொடுத்ததாகவும், மேற்படி காசோலைகளுக்குரிய தேதியில் புகார்தாரர் பிரபாகரன் காசோலைகளை வசூலுக்கு செலுத்துவதற்காக வைத்திருந்தபோது, எதிரி தன்னை இரண்டு மாதம் கழித்து வசூலுக்கு தாக்கல் செய்து கொள்ளும்படி சொன்னதாகவும், அதனால்தான் இரண்டு மாதங்களுக்கு பிறகு 27.07.2023-ஆம் தேதி புகார்தாரர் காசோலைகளை வசூலுக்கு தாக்கல் செய்ததாகவும் புகார்தாரர் பிரபாகரன் தனது நிரூபண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளார்.

9.17). ஆனால், 06.03.2023-ஆம் தேதிக்கு பின்னிட்டு, அதாவது, 18.05.2023-ஆம் தேதியிலிருந்து 22.05.2023-ஆம் தேதி வரை சுமார் ரூ.6,00,000/-ம் ரூபாய் எதிரியின் வங்கி கணக்கில் இருந்து புகார்தாரரின் வங்கி கணக்கிற்கு வந்தது என்ற விபரம் எதிரி தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ள நிலையில், மேற்படி பணம் எதிரி தனக்கு முன்கூட்டியே செலுத்த வேண்டிய தொகைக்கு கொடுக்கப்பட்டதாக புகார்தாரர் தரப்பில் சாட்சியம்

அளிக்கப்பட்டிருந்தாலும்கூட, அந்த விபரம் எதுவும் அதாவது, எதிரி தனக்கு ஏற்கனவே கொடுக்க வேண்டிய, அல்லது எதிரியால் கொடுக்கப்பட வேண்டிய கடன் தொகை நிலுவையில் உள்ளது என்ற விபரத்தையும், அதற்கு பிறகுதான் இந்த வழக்கின் தொகையான ரூ.10,00,000/-ம் பணத்தை கொடுத்ததாகப் புகார்தாரர் பிரபாகரன் தனது வழக்கறிஞர் அறிவிப்பு, நீதிமன்றத்தில் தாக்கல் செய்த புகார் மனு மற்றும் தனது நிருபண வாக்குமூலத்தில் எந்த விபரமும் குறிப்பிட்டு தாக்கல் செய்யவில்லை.

9.18). எனவே, ரூ.6,00,000/-ம் பணம் எதிரியிடமிருந்து திரும்பப் பெற்றுள்ள இந்த வழக்கின் புகார்தாரர், எதிரி தனக்கு ஏற்கனவே கொடுக்கப்பட வேண்டிய கடன்பட்ட நபர் என்ற விபரத்தை இந்த வழக்கில் எந்த இடத்திலும் குறிப்பிடாத நிலையில், 18.05.2023-ஆம் தேதி முதல் 22.05.2023-ஆம் தேதி வரை புகார்தாரர் பெற்ற ரூ.6,00,000/-ம் பணம் இந்த வழக்கிற்காக தரப்பட்டதுதான் என குறிப்பிடும் எதிரி தரப்பு வாதம் ஏற்புடையது என்று இந்த நீதிமன்றம் கருதுகிறது.

9.19). எனவே, 06.03.2023-ஆம் தேதியில் எதிரிக்கு ரூ.10,00,000/-ம் கொடுத்ததாகச் சொல்லும் புகார்தாரர், அதற்கு முன்பு எதிரி தனக்கு எவ்வளவு பணம் ஏற்கனவே திரும்பச் செலுத்த வேண்டிய கடமைப்பட்டுள்ளார் என்ற விபரத்தை வழக்கில் தெரிவிக்கவில்லை. மேலும், புகார்தாரரின் கூற்றுப்படி, எதிரி ஏற்கனவே பட்ட கடனை (ரூ.6,00,000/-) திருப்பி (06.03.2023-ஆம் தேதிக்குள்) செலுத்தாத நிலையில், மேலும், ரூ.10,00,000/-ம் 06.03.2023-ஆம் தேதி கொடுத்ததாகச் சொல்லும் புகார்தாரர் தரப்பு வாதம் சாதாரண மனிதனின் அறிவுக்கு எட்டும் வகையில் இல்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

9.20). எனவே, எதிரி ரூ.10,00,000/-ம் பணம் பெற்றுக் கொண்டுள்ளார் என்ற விவரமும், அதன் பிறகு இந்த வழக்கின் புகார்தாரர் பிரபாகரன் ரூ.6,00,000/-த்தை திரும்ப பெற்றுக் கொண்டுள்ளார் என்ற விபரமும் இருதரப்பிலும் நிரூபிக்கப்பட்டுள்ள

நிலையில், இந்த வழக்கின் எதிரி கார்த்திகேயன்தாஸ் மீண்டும் ரூ.10,00,000/-ம் பணம் தர வேண்டும் என குறிப்பிட்டு வழக்கு தாக்கல் செய்துள்ள புகார்தாரரின் வழக்கு ஏற்புடையது அல்ல என்று இந்த நீதிமன்றம் தீர்மானிக்கிறது. எனவே, புகார்தாரருக்கு ஆதரவான மாற்றுமுறை ஆவணச் சட்டம் 1881 பிரிவு 139-ன் கீழான அனுமானம் எதிரி தரப்பால் மறுத்துரைக்கப்பட்டுள்ளது என்று இந்த நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

10).**<u>தீர்வு</u>**:

10.1). முடிவாக, எதிரியை மாற்றுமுறை ஆவணச்சட்டம் பிரிவு 138-ன் கீழ் குற்றவாளி இல்லை என தீர்மானித்து, எதிரியை கு.வி.மு.ச. பிரிவு 255(1)-ன் கீழ் இந்நீதிமன்றம் விடுதலை செய்து தீர்ப்பளிக்கிறது. புகார்தாரருக்கு இழப்பீடு தொகை கிடைக்கத்தக்கதல்ல என்றும் இந்த நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

10.2). இவ்வழக்கில் தடயப் பொருள் தாக்கல் இல்லை.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாகச் சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின் என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, திறந்த நீதிமன்றத்தில் நீதிமன்ற இலட்சணையுடன் 2026 ஜூலை திங்கள் 30-ஆம் நாளாகிய இன்று அவையறியப் பகரப்பட்டது.

NALLA KANNAN M

Digitally signed by NALLA KANNAN M
Date: 2026.07.30 18:33:41 +0530

நீதித்துறை நடுவர்,
போடிநாயக்கனூர்.

**1). புகார்தாரர் தரப்பு சாட்சிகளின் பட்டியல்**:

| | | | |
|---|---|---|---|
| 1. | ம.சா.1 | திரு.பிரபாகரன் | புகார்தாரர் |
| 2. | ம.சா.2 | திரு.பாலமுருகன் | மதுரை Yes Bank வங்கி கிளை மேலாளர் |

**2). புகார்தாரர் தரப்பு சான்றாவணங்களின் பட்டியல்**:

| | | | |
|---|---|---|---|
| 1. | ம.சா.ஆ.1 | புகார்தாரருக்கு எதிரி ரூ.5,00,000/-க்கு 05.05.2023-ஆம் தேதியிட்டு கொடுத்த எஸ் பேங்க் கோரிபாளையம் கிளையின் 841591 எண் உள்ள காசோலை அசல். | ம.சா.1 |
| 2. | ம.சா.ஆ.2 | புகார்தாரருக்கு எதிரி ரூ.5,00,000/-க்கு 05.05.2023-ஆம் தேதியிட்டு கொடுத்த எஸ் பேங்க் கோரிபாளையம் கிளையின் 841592 எண் உள்ள காசோலை அசல். | ம.சா.1 |
| 3. | ம.சா.ஆ.3 | எதிரி கொடுத்த காசோலைகள் பணமாகாமல் 28.07.2023-ஆம் தேதி திருப்பப்பட்டதற்கான ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா தேவாரம் கிளை வங்கி கொடுத்த குறிப்பாணைகள் (RETURN MEMOS – 2) அசல்கள். | ம.சா.1 |
| 4. | ம.சா.ஆ.4 | புகார்தாரர் 10.08.2023-ஆம் தேதி எதிரிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு மற்றும் அனுப்பப்பட்டதற்கான ரசீது அலுவலக நகல். | ம.சா.1 |
| 5. | ம.சா.ஆ.5 | புகார்தாரர் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பினை 11.08.2023-ஆம் தேதி பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டை அசல். | ம.சா.1 |
| 6. | ம.சா.ஆ.6 | புகார்தாரர் ஆதார் அட்டை அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்ட நகல். | ம.சா.1 |

**3). புகார்தாரர் தரப்பு சான்றுப் பொருள்களின் பட்டியல்**: தாக்கல் இல்லை.

**4). எதிரி தரப்பு சாட்சிகளின் பட்டியல்**:

| | | | |
|---|---|---|---|
| 1. | எ.சா.1 | திரு.கார்த்திகேயன்தாஸ் | எதிரி |
| 2. | எ.சா.2 | திரு.ராஜ்குமார் | சிங்கம்புணரி ICICI வங்கி கிளை மேலாளர் |

**5). எதிரி தரப்பு சான்றாவணங்கள்**:

| | | | |
|---|---|---|---|
| 1. | எ.சா.ஆ.1 | எதிரியின் சிங்கம்புணரி ஐ.சி.ஐ.சி.ஐ கிளை வங்கி கணக்கு அறிக்கை. | எ.சா.1 |

**<u>6). எதிரி தரப்பு சான்றுப்பொருட்களின் பட்டியல்</u>: தாக்கல் இல்லை.**

NALLA KANNAN M Digitally signed by NALLA KANNAN M Date: 2026.07.30 18:33:46 +0530

**நீதித்துறை நடுவர்,**

**போடிநாயக்கனூர்.**